9th August 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

விடவில்லை. இயற்கை எவ்வளவு தூரம் நமக்கு உதவுகிறதோ அவ்வளவுதூரம் அதன் உதவிகளை நாம் பயன்படுத்திக் கொண்டு வருகிறோம். அது விஷயத்தில் தொடர்ந்து கவனம் செலுத்தப் பட்டு வருகிறது. ஆகவே, இது ஒத்திவைப்புப் பிரேரணைக்கு உகந்தது அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : This is not a matter for an adjournment motion. So, I withhold my consent to it.

III—GOVERNMENT MOTIONS

(1) SUSPENSION OF RULE 41 (3).

MR. SPEAKER : We have got two notices under Rule 41. Therefore the Hon. Leader of the House may move that Rule 41 (3) be suspended for to-day.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, under rule 244 of the Assembly Rules, I move—

'That sub-rule (3) of Rule 41 of the Madras Legislative Assembly Rules, in so far as it requires that not more than one matter shall be raised under Rule 41 at the same sitting, be suspended'.

The motion was put and carried unanimously.

IV.—CALLING ATTENTION TO

(1) CRITICAL FOOD SITUATION IN THE NILGIRIS DISTRICT.

திரு. ஜே. மாதா கவுடர் : கனம் சபாநாயகர் அவர்களே, நீலகிரி மாவட்டம் முழுவதற்கும் இன்னும் ஒரு மாதம் உணவு அளிக்கக் கூடிய தானியங்கள்கூட அங்கே உள்ள உணவுதானியக் கிடங்கு களில் இல்லை என்கிற விவரம் தெரிகிறது. ஆகவே, நீலகிரி மாவட்டத்தில் அரசாங்கக் கிடங்குகளில் உணவு தானியங்கள், அந்த மாவட்ட மக்களின் தேவையை ஒரு மாத காலத்திற்குக்கூட பூர்த்தி செய்ய முடியாத அளவிற்கு மிகக் குறைந்த அளவே உள்ளது பற்றியும், அரிசிப் பங்கீட்டு அளவைக் குறைத்ததன் விளைவாக மலைத்தோட்டத் தொழிலாளர்கள் இன்னல் அடைந் துள்ளது பற்றியும் ஆன பொதுமுக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை நான் கனம் உணவு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH : The present stock of rice in the Nilgiris district is 2,100 tonnes and this will last for about three weeks on the basis of the existing off-take. A quantity of about 4,000 tonnes will be moved to the district during August 1966. With the receipt of these allotments the food position in the district will be eminently satisfactory and no apprehension need be felt by this House regarding the supply of rice to Nilgiris. Perhaps an unfortunate impression has been created by the announcement of the

[Sri V. Ramaiah] [9th August 1966

Collector of Nilgiris that there has been a reduction of the quantum of rice given to the estate and project labour by 200 grams, i.e., from 1,800 to 1,600 grams. The present ration to the estate labour is 1,600 grams even after reduction which is higher than what is permitted in statutory areas of Madras City and Coimbatore viz., 1,400 grams. The Collector has given in lieu of this an extra quantity of 250 grams of ragi or cholam according to the preference of the consumer. Thus more gram is being issued to the estate labour.

10-00 a.m. In this connection, I wish to add that the issue of 1,800 grams of rice did not have the concurrence of the Government and the Collector has acted rightly in standardising the issue in consideration of the difficulty caused to the State by the delayed release of Mettur water. The stocks of Ragi, Milo and Wheat in the district are quite good as indicated below :—

Ragi	1,735 tonnes.
Milo	926 tonnes.
Wheat	371 tonnes.

(2) Fire accidents and Crimes in Usilampatti.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : கனம் தலைவரவர்களே, மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் 7-8-1966 இரவு ஒன்றரை மணிக்குத் திடீரென்று தீப்பிடித்திருக்கிறது. உசிலம்பட்டி கண்மாயக் கரையில் ஏற்பட்ட இந்த தீயில் இருபதுக்கு மேற்பட்ட கடைகள் எரியுண்டிருக்கின்றன.

இது ஏதோ தற்செயலாக நடைபெற்றது எனக் கருதுவதற்கு இடமில்லை. சென்ற சில வாரங்களாக உசிலம்பட்டி வட்டார முழுவதிலும் தீ வைத்தல், கூட்டங்களைப் பலாத்காரமாகக் கலைத்தல், கல்வீச்சு, பயங்கரமான ஆயுதங்களைப் பயன்படுத்தி எதிர்க்கட்சித் தலைவர்களைத் தாக்குதல் முதலிய சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. உசிலம்பட்டிப் பகுதியில் மட்டும் ஒரு சில மாதங்களில் 10 கொலைகள் நடந்திருக்கின்றன. ஒரு சில கேசுகள் கூடக் கண்டுபிடிக்கப்படவில்லை. பஞ்சாயத்துத் தேர்தலின்போது லைசென்ஸ் இல்லாத ரிவால்வர் வைத்திருந்தவர்களைக் கையோடு டிப்டி சூப்பிரண்டெண்ட் அவர்களே கைது செய்தார். இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது போன்ற விவரங்கள் அமைச்சர் அவர்களுக்கு மனுவின் மூலம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. துரித நடவடிக்கை எடுக்காத காரணங்களால் சட்ட விரோத சம்பவங்கள் அடுத்தடுத்து நடைபெறுகின்றன. இச்சம்பவங்களால் பொதுமக்கள் பெரிதும் பீதியடைந்திருக்கின்றனர். அவர்களுடைய உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பற்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. இதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

*கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்பு கனம் உறுப்பினர் அவர்கள் இது பற்றி என்னிடம் பிரஸ்தாபித்தபொழுது தகவல் சேகரித்து நான்